# இந்து சமய அறநிலையத்துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| இரா.கண்ணன், இ.ஆ.ப, | இணை ஆணையர்/செயல் அலுவலர்கள் |
| ஆணையர் (மு.கூ.பொ), | துணை ஆணையர்/செயல் அலுவலர்கள் |
| சென்னை–34. | உதவி ஆணையர்/செயல் அலுவலர்கள் |

**ந.க.எண்.27080/2022/இசட் 1/ நாள்.30.05.2022**

ஐயா / அம்மையீர்,

**பொருள்** : தமிழ்நாடு சட்டப்பேரவை அறிவிப்புகள் 2022–2023 – இந்து சமய அறநிலையத்துறை – அறிவிப்பு எண்.34 – திருக்கோயில்களில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதில் தரிசனம் செய்ய ஏதுவாக மரத்தினாலான சாய்வுத்தளங்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் அமைத்தல் – அறிவிப்பினை செயல்படுத்துதல் – தொடர்பாக.

**பார்வை** : 1. மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள். 04.05.2022.

2.இவ்வலுவலக கடித ந.க.எண். 18850/2017/இசட்3/ நாள். 26.04.2017.

-----

2022–2023–ம் ஆண்டின் சட்டமன்ற பேரவையின் வரவு செலவு கூட்டத்தொடரில் மானிய கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

<u>அறிவிப்பு எண்.34</u>

**"48 முதுநிலைத் திருக்கோயில்களிலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதில் தரிசனம் செய்ய ஏதுவாக திருக்கோயில் வளாகத்தில் மரத்தினாலான சாய்வுத்தளங்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்யப்படும்".**

எனவே, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் திருக்கோயிலுக்கு வருகை தரும் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் எளிதில் சுவாமி தரிசனம் செய்ய ஏதுவாக மரத்திலான சாய்வுத்தளங்களை அமைத்திட நடவடிக்கை எடுத்திடவும் மேலும், தேவையான எண்ணிக்கையில் மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்காக சக்கர நாற்காலிகளை கொள்முதல் செய்ய உடன் நடவடிக்கை எடுத்திடவும் முதுநிலை திருக்கோயில்களில் செயல் அலுவலர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு செய்ய வேண்டிய வசதிகள் குறித்து கீழ்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு பயன்படும் வகையில் திருக்கோயில்களில் சக்கர நாற்காலி வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பக்தர்கள் எளிதில் அறியும் வகையில் அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.
2. திருக்கோயில் நுழைவு வாயில் அருகில் குறைந்தபட்சம் 5 சக்கர நாற்காலிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

3. திருக்கோயில்களில் இதற்காக தனியாக ஒரு பணியாளர் பொறுப்பில் இருக்க வேண்டும்.
4. சக்கர நாற்காலியில் வருபவர்கள் எளிதில் தரிசனம் செய்யும் வகையில் தேவையான இடங்களில் மரப்பலகையிலான சாய்வுத்தளங்கள் அமைக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை உடன் செயல்படுத்தி 10.06.2022–க்குள் அறிக்கை சமர்ப்பிக்க முதுநிலை திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

மேலும் இப்பணிகளை தனிக்கவனம் செலுத்தி கண்காணிக்க மண்டலஇணை ஆணையர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–இரா.கண்ணன்
ஆணையர் (மு.கூ.பொ)

/உண்மைநகல் உத்தரவுப்படி/

1/6/22

கண்காணிப்பாளர்

1.6.22

நகல்: (மின்னஞ்சல் மூலம்)

அனைத்து மண்டல இணை ஆணையர்கள்

மிகை.